II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 11 of 2021**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Selvi | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

PW1 மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

இந்த வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்று பரிகாரம் கேட்டிருக்கிறோம். வழக்கு சர்வே எண்கள் 192/3 மற்றும் 163 ஆகியவை எங்களுக்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மின் கட்டணம் ரசீது, வரி ரசீது, பட்டா ஆகியவற்றை கொடுத்துள்ளோம். வா.சா.ஆ.2 பட்டா சர்வே எண்.77/4B க்கு உட்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டா எந்த சர்வே எண்ணிற்கு உரியது என்றும் எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பட்டா என் தாத்தா பெயரில் உள்ளது. வா.சா.ஆ.3 முதல் 37 வரையான ஆவணங்கள் எதுவும் வழக்கு சர்வே எண்கள் 192/3 மற்றும் 163 விற்கு உட்டபட்டவை அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தற்போதைய சர்வே எண் 192/3 மற்றும் 163 ஆகும். இந்த சொத்தை என் தாத்தா கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கினாரா என்றால் ஆமாம். என் தாத்தா, ராஜகோபால் நாயக்கரிடம் இருந்து 4 செண்ட் நிலத்தை கிரையம்

வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. என் பாட்டி லட்சுமியம்மாள் (எ) குப்பம்மாள் ஆவார். முந்தைய குறுக்கு விசாரணையில் என் தாத்தாவிற்கு இரண்டு மனைவிகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறாக சொல்லிவிட்டேன். லட்சுமியம்மாள் ராகவநாயக்கரிடம் இருந்து 4 செண்ட் நிலம் கிரையம் வாங்கியது பற்றி எனக்கு தெரியும். அந்த 4 செண்ட் நிலமும் இந்த வழக்கு சொத்திற்குள் தான் வருகிறது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சர்வே எண்.192/3ன் விஸ்தீரணம் 12 1/2 செண்ட் ஆகும். சர்வே எண். 163 ன் விஸ்தீரணம் 20 செண்ட் ஆகும். சர்வே எண். 192/3யின் பழைய சர்வே எண். 77/3 என்றால் எனக்கு சரியாக தெரியவல்லை. சர்வே எண்.163ன் பழைய சர்வே எண். 77 / 4 என்றால் அது எனது தம்பிக்கு தான் தெரியும். இந்த வழக்கில் எனது தம்பியை விசாரிக்கபோகிறேனா என்றால் ஆம். வா.சா.ஆ.38 முதல் 41 வரையான அடங்கல், சிட்டா ஆகியவற்றில் சர்வே எண். 77/3 மற்றும் 77 / 4 தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த பழைய எண் பற்றி என் தம்பிக்கு தான் தெரியும். சர்வே எண்.77/4B1, 77/3A. 77/3B ஆகியவற்றில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு சிட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.38 முதல் 41 வரையான ஆவணங்கள் என் தந்தை கண்ணப்பன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.77/4B1 ஆனது 2 1/2 செண்டிற்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.77/3A ஆனது 1 1/2 செண்டிற்கு தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 77/3B ஆனது 5 செண்டிற்கு தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகளின் சரியான சர்வே எண்கள் 77/3 மற்றும் 77/4 க்கு தொடர்புடையவை மட்டும் தான் என்றால் எனக்கு தெரியாது.சர்வே எண்கள் 77/3 மற்றும் 77/4 உரிய ஆவணங்களை தான்

நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் கூறியுள்ள சர்வே எண் 192/3 மற்றும் 163 உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாத சர்வே எண்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(இந்நிலையில் 1 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)